இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் **III**

இறுதிப் பரீட்சை–**2016/2017**

சட்டத்தினை விளங்கிக் கொள்ளல் -

**LWU1161**

காலம் - 02 மணித்தியாலயம்

.........................................................................................................................

திகதி– **08** ஆகஸ்டு 2017 காலம்- பி.ப 1.00- பி.ப 3.00

.........................................................................................................................

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்

1. (அ) நீர், இலங்கையினது அரசியலமைப்பு வரலாற்றினைப் பற்றிய உரை ஒன்றினை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றீர். 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்புக்களுக்கு விசேட கவனம் செலுத்தி உமது உரையினை தயாரிக்க.

(10 புள்ளிகள்)

(ஆ) "பாராளுமன்ற மேலாண்மை"எனும் கோட்பாட்டினை விளக்குக. (10 புள்ளிகள்)

(இ) பேராசிரியர் டைசியினுடைய சட்டவாட்சி மீதான வரைவிலக்கணத்தை கூறுக.

(05 புள்ளிகள்)

2. (அ) இலங்கை அரசியலமைப்பில் பொதிந்துள்ள ஏதேனும் 3 அடிப்படை உரிமைகளை தெரிவு செய்து சுருக்கமான எடுத்துக்காட்டுக்களை தருக. நீர் உமது எடுத்துக்காட்டுக்களில் நடைமுறை ரீதியிலான உதாரணங்களை குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றீர்.

(15 புள்ளிகள்)

(ஆ) X எனும் கிராமத்தில், கொலை செய்யப்பட்ட 4 வயதுடைய பெண் பிள்ளையொன்றின் உடல் கண்டெடுக்கப்பட்டதுடன் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் அப்பெண் பிள்ளை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வந்தது. 26 வயதுடைய ரன்ஜன் எனும் அயல் கிராமத்தவன் இக்கொலையினை செய்ததற்காக சந்தேகத்தின் பேரில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டான். ரன்ஜன் ஏனைய சக கிராமத்தவர்களால் குழப்பக்காரனாக கருதப்பட்டதோடு முன்பு ஏனைய பல குற்றங்களிலும் ஈடுபட்டு இருந்தான். ரன்ஜன் கட்டுக்காவலில் இருக்கும் பொழுது பொலிசார் கொலை தொடர்பான குற்ற ஒப்புதலை அவனிடமிருந்து பெறுவதற்காக அவனை கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தினர். ரன்ஜன் ஆல் அடிப்படை உரிமை மீறலுக்கான அடிப்படையின் கீழ் வெற்றிகரமான சட்ட கோரிக்கை ஒன்றினை மேற்கொள்ள முடியுமா? ஆராய்க.

(10 புள்ளிகள்)

3. (அ) இலங்கையின் வேறுபட்ட சட்ட முறைமையினை பட்டியற்படுத்துக.

(05 புள்ளிகள்)

(ஆ) நீர் (அ) இல் அடையாளப்படுத்திய ஏதேனும் இரு சட்ட முறைமைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) "இடம்சார் சட்டம்" மற்றும் "தனிநபர் சட்டம்" ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடு யாது? நீர் இலங்கை சட்ட முறைமையிலிருந்து பெற்ற உதாரணங்களைக் கொண்டு உமது விடை ஆதாரப்படுத்தப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றீர்.

(10 புள்ளிகள்)

4. (அ) அன்றாட வாழ்கையிலிருந்து நடைமுறையிலான உதாரணங்களைக் கொண்டு வலிதான கொடைமுனைவு ஒன்றினது தேவைப்பாடுகளை விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் சூழ்நிலைகளில் வலிதான ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டுள்ளனவா என ஆராய்க.

(i) மாலதி, நாலக்கவின் மனைவியாவாள். அவர்களது திருமண ஆரம்பத்தில் நாலக்க மாலதிக்கு ஒவ்வொரு மாதமும் அவளுக்கு ஆடைகள் மற்றும் அலங்காரப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 5000 ரூபா வழங்குவதாக உறுதியளித்தான். நாலக்க முதல் சில மாதங்கள் அவனது வாக்குறுதியினை கடைபிடித்தான். ஆனால் பிறகு அவர்களிடையே பிணக்குகள் ஏறபட்டதனாலும் திருமணம் சந்தோசமற்று காணப்பட்டதனாலும் நாலக்க அவனது வாக்குறுதியினை தொடர மறுத்தான். மாலதி நாலக்கவிற்கு எதிராக ஒப்பந்த முறிவிற்காக வழக்கு தொடர கருதுகிறாள்.

(05 புள்ளிகள்)

(ii) சம்பா என்பவள் ஒரு பாடசாலை ஆசிரியை. அவள் பாடசாலைக்கு பஸ் வண்டி மூலமாக பயணிக்கிறாள். முச்சக்கரவண்டி சாரதி ஒருவனான வேலு என்பவன் (அவனது பிள்ளையும் அதே பாடசாலையில் படிக்கின்றான்) சம்பாவிற்கு முச்சக்கர வண்டியில் பாடசாலை செல்வதற்கு கொடை முனைவு ஒன்றினை மேற்கொண்டதோடு அவன் தனது பிள்ளையினை தினமும் பாடசாலைக்கு முச்சக்கரவண்டியில் கூட்டிச்செல்வதனால் அவன் சம்பாவிற்கு போக்குவரத்து வசதியினை வழுங்குவதில் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தான். கட்டணம் பற்றி வினவியபோது வேலு எந்தவொரு கட்டணத்தையும் ஏற்க மறுத்ததோடு இதனை தனது பிள்ளையின் ஆசிரியருக்குச் செலுத்தும் மரியாதைக்காகவே தான் இதனை செய்வதாகவும் கூறினான். சம்பா இக்கொடை முனைவினை ஏற்றுக்கொண்டாள்.

(05 புள்ளிகள்)

5. (அ) ஒப்பந்தம் ஒன்றினை செய்வதற்கான தகுதியினை பாதிக்கும் காரணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) நிபந்தனை ஒன்றிற்கும் கட்டுறுத்து ஒன்றிற்குமிடையேயான வேறுபாடு யாது?

(05 புள்ளிகள்)

(இ) வலிதான விலக்களிப்பு வாசகத்திற்கான தேவைப்பாடுகள் யாவை?

(05 புள்ளிகள்)

(ஈ) ஒப்பந்தமொன்றினது வெளிப்படையான வாசகங்களை உட்கிடையான வாசகங்களிலிருந்து வேறுபடுத்துக.

(05 புள்ளிகள்)

6. பின்வரும் சூழ்நிலைகளினது சட்ட வலிதாந்தன்மையினை ஆராய்க.

(அ) தன்னை பின்பற்றுவோர் அவர்களது நம்பிக்கை நிமித்தம் எதனையும் தனக்காக செய்வர் என அறிந்த மதகுரு ஒருவர் ஓர் வயது முதிர்ந்த பெண்மணியை அவளது இறுதி விருப்பாவணத்தினை தனக்கு சார்பாக வரையுமாறு தூண்டினார்.

(ஆ) நிலுபுலி, சன்ன என்பவனுடன் அவளது வீட்டினை அவனுக்கு 2 மில்லியன் ரூபாவிற்கு விற்பனை செய்வதற்காக ஒப்பந்தம் ஒன்றினுள் நுழைந்தாள். சன்ன கெஸ்பேயவில் அமைந்துள்ள அவளது வீட்டினை விற்பதாக நினைத்தான். ஆனால் உண்மையில் நிலுபுலி ராஜகிரியவில் அமைந்துள்ள தனது வீடுகளில் ஒன்றினையே சன்னவிற்கு விற்க கருதினாள்.

(இ) லக்சான், ருவன் என்பவனது ஆதரவினை தனது வியாபாரத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக உடன்படிக்கையொன்றினை உருவாக்கினான். லக்சான் ஈடுபட்டுள்ள வியாபாரமானது பெரியளவிலான ஹெரோயின் விநியோகத்தினை உள்ளடங்கிய போதைப்பொருட்களுடன் தொடர்பானதாகும். லக்சான் ருவன் இற்கு அவனது உதவிகளுக்காக மாத கொடுப்பனவொன்றிற்கு வாக்குறுதியளித்தான்.

(ஈ) மயுரன் அவனது முன்தோழியான பிரமிளாவிற்கு மாதத்திற்கு 5000 ரூபா தொகையினை தனக்கு தருமாறும் இல்லாவிட்டால் தமது தனிப்பட்ட புகைப்படங்களை வெளியிடுவதாகவும் அச்சுறுத்தினான். அவள் பயத்தின் காரணமாக அவனது கோரிக்கைக்கு ஒப்புக்கொண்டாள்.

(உ) பிரதிபா அவளது கையடக்கத்தொலைபேசியினை கார்த்திக் என்பவனுக்கு தொலைபேசியில் இணைய தேடலுக்கான மென்பொருட்பதிவுகள் உள்ளடங்கியுள்ளதாகக் கூறி விற்கிறாள். தொலைபேசியினை பெற்றதன் பிறகு அவளது கூற்றானது உண்மையல்ல எனவும் பிரதிபா தன்னை வேண்டுமென்றே ஏமாற்றி உள்ளதாகவும் கார்த்திக் அறிகிறான்.

(5×5 = 25 புள்ளிகள்)

7. (அ) ஒப்பந்தமொன்று முடிவுறுவதற்கான வேறுபட்ட வழிவகைகளை விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) ஒப்பந்த முறிவிற்கான பரிகாரங்கள் யாவை?

(10 புள்ளிகள்)

8. (அ) வேறுபட்ட தொழில் வகைகளை சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) தொழில் ஒப்பந்தம் மற்றும் தொழிலுக்கான ஒப்பந்தம் ஆகியவற்றிற்கிடையே சட்டம் எவ்வாறு வேறுபடுகிறது என விளக்குக.

(10 புள்ளிகள்)

...... பதிப்புரிமை பெற்றது..........